**இலங்கை சமூக பாதுகாப்புச் சபை - 2010**

-----------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

-------------------

**1.1. அபிப்பிராயம்**

---------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட உயர்ந்த பட்ச தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை சமூக பாதுகாப்புச் சபை 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய கணக்கேடுகளை முறையாகப் பேணியிருந்தது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---------------------------------------------------------------------

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இ.க.நி. 18

-----------------

நிதிக்கூற்றுக்களில் வேறாகக் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 7,899,912 தொகையான மீள்பெறுமதியிடல் ஒதுக்கம் திரண்ட நிதியத்திற்கு சேர்க்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததது.

(ஆ) இ.க.நி. 03

நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய இரண்டு வங்கி சேமிப்புக் கணக்குகளின் மீதிகளின் ரூபா 14,621,648 கூட்டுத் தொகை ஐந்தொகையில் நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய பங்களிப்பாளர்களின் ஓய்வூதிய நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட இடர் கடனுக்காகப் பெறப்பட்ட ரூபா 136,801 தொகையான வட்டியும் இடர் கடன் கொடுப்பனவுக்காக திறைசேரியில் இருந்து பெறப்பட்ட தொகையை வைப்புச் செய்ததன் மூலம் பெறப்பட்ட ரூபா 89,441 தொகையான வட்டியும், வருமானச் செலவினக் கணக்கில் வட்டி வருமானமாகக் கணக்கிடப்பட்டிருந்தன.

(ஆ) காசுப் பாய்ச்சல் கூற்றின் நிதிச் செயற்பாடுகளினால் கிடைக்கப்பெற்ற காசுப் பாய்ச்சலின் கீழ் உள்ளக நிதியிலிருந்து உருவான தேறிய பெறுவனவுகள் ரூபா 278,789,530 ஆக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 278,514,902 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) 2006 மார்ச் மாதத்திலிருந்து 2010 திசெம்பர் 31 வரையான காலத்தில் சேமிப்புக் கணக்கிற்கு நேரடியாகச் செலவுவைக்கப்பட்ட ரூபா 965,786 தொகை உரிய முறைப்படி இனங்காணப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2005 ஒக்டோபர் மாதம் முதல் 2009 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 92,711 தொகை வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

சான்றுகள் இல்லாத காரணத்தினால் நிதிக்கூற்றுக்களின் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்படும் ரூபா 8,577,618 தொகையான இனங்காணப்படாத காசு மீதியினை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| **(அ) நிதிப்பிரமானங்கள்** | | |
| (i) | நி.பி. 110 | சபையில் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 316 மற்றும் 341 | அடிக்கட்டைகள் பாதுகாப்பான இடத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிராததுடன் அடிக்கட்டைப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி. 754 | பொருட் பதிவேட்டுப் புத்தகங்கள் சமப்படுத்தப்பட்டு மீதி முன்கொண்டுவரப்படாது மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் பதிவு செய்யப்பட்டு பௌதீக மீதி முன்கொண்டுவரப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iv) | நி.பி. 757(2)(அ) மற்றும் 756 | பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டு உரிய அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நி.பி. 770(2) மற்றும் (3) | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பில் கைதவிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நி.பி. 1645(அ), 1646 மற்றும் 1647(உ) | சம்பவக் குறிப்பேடு மற்றும் வாகனப் பதிவேடு பேணப்பட்டிராததுடன் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2004 நவம்பர் 30 ஆந் திகதிய பீஈடீ 25 (3) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ரூபா 1,085,981,258 தொகையான முதலீடுகளுக்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2007 பெப்ரவரி 26 ஆம் திகதிய 424 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | காரியாலயத்தின் சகல தொலைபேசிகளுக்காகவும் ஒரு பட்டியலின் மூலம் தொலைபேசி அழைப்புக் கட்டணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய உத்தியோகத்தர்களின் அழைப்புக் கட்டணங்கள் வெவ்வேறாக இனங்காணப்படக் கூடியவகையில் தொலைபேசி முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1997 யூலை 09 ஆம் திகதிய 21/யூலை03/96 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு சபைத் தலைவரின் கடிதம் | தபால் காரியாலயங்கள் மற்றும் உப தபாலகங்களின் மூலம் சேகரிக்கப்படும் பணம் ஒரு மாத காலத்திற்குள் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | சமூக பாதுகாப்பு சபையின் 2009 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 05 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | 10 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 68,705 தொகையான உப கட்டுநிதிகள் தீர்த்து வைக்கப்பட்டிராத போதிலும் தீர்த்துவைக்காத ஊழியர்களின் கிட்டிய சம்பளங்களினால் அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

**1.2.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது இரு வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக ரூபா 298,615 செலவிடப்பட்டிருந்த போதிலும் அப் பழுதுபார்ப்பிற்கான அங்கீகாரம், விலைக் கோரல்கள் மற்றும் கொடுப்பனவிற்குரிய பட்டியல்கள் கோவைகளின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை வாகனம் பழுதுபார்க்கப்படுவதற்கு முன்னரும் பழுதுபார்த்தல்கள் முறையாக மேற்கொள்ளப்பட்டனவா என்பதனையும் தொழிநுட்ப உத்தியோகத்தரின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) முறையான அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபை பத்திர பீஎம்/168/2010/14 ஆம் இலக்க அங்கீகாரத்தின் பேரில் 2010 யூன் 01 ஆம் திகதி முதல் நிறுவகத்தின் சகல நிரந்தர ஊழியர்களுக்கும் ஓய்வூதிய உரிமை வழங்கப்பட்டிருந்தது. ஊழியர்களின் சம்பளங்களில் இருந்தும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தில் இருந்தும் 50% படியான பங்களிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டிற்காக சமூகப் பாதுகாப்பு நிதியத்தில் இருந்து ஓய்வூதிய நிதியத்திற்கு வழங்கப்பட்ட பணம் ரூபா 1,802,857 ஆகும்.

## 2. நிதிசெயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது சபையின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 8,766,402 தொகையான பற்றாக்குறை ஏற்பட்டிருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,072,300 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 6,694,102 ஆல் மேலும் வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததுடன் அதற்கு ஆளணி வேதனங்கள், ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடு, சீருடை, எரிபொருள், காகிதாதிகள் என்பன வழங்கல் உள்ளடங்கலாக வேறு செலவினங்கள் அதிகரித்தமை தாக்கமளித்திருந்தன.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) பங்களிப்பாளர்களைச் சேர்த்துக்கொள்ளல்**

2010 ஆம் ஆண்டிற்கு 100,000 பங்களிப்பாளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டு 22 மாவட்டங்களுக்கு 42 மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு வருடாந்தச் சம்பளமாக ரூபா 10,992,223 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் பங்களிப்பாளர்களைச் சேர்ப்பதிலான முன்னேற்றம் திருப்திகரமான மட்டத்தில் இல்லாததுடன் ஒட்டுமொத்த இலக்கில் 41% இனைப் பார்க்கிலும் குறைவான அளவே எய்தப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| | மாவட்டம் | உத்தியோகத் தர்களின் எண்ணிக்கை | வருடாந்தச் சம்பளம் | சேர்க்கப்பட்ட பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை | | இலக்கினை எய்திய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | இலக்கிடப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | |
| | | | ரூபா | | | |
| 1. | கொழும்பு | 3 | 768,660 | 6000 | 363 | 06 |
| 2. | கம்பஹா | 2 | 528,780 | 6000 | 2200 | 37 |
| 3. | களுத்துறை | 2 | 510,720 | 6000 | 1143 | 19 |
| 4. | காலி | 2 | 528,780 | 5000 | 440 | 09 |
| 5. | மாத்தறை | 2 | 515,880 | 7000 | 4502 | 64 |
| 6. | ஹம்பாந்தோட்டை | 2 | 557,040 | 3000 | 2352 | 78 |
| 7. | இரத்தினபுரி | 2 | 500,400 | 3500 | 508 | 15 |
| 8. | கேகாலை | 2 | 554,460 | 5000 | 2306 | 46 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9. | கண்டி | 2 | 547,140 | 7000 | 2373 | 34 |
| 10. | மாத்தளை | 2 | 526,200 | 4000 | 901 | 23 |
| 11. | நுவரெலியா | 1 | 265,176 | 3000 | 4003 | 133 |
| 12. | குருநாகல் | 2 | 468,360 | 8000 | 7611 | 95 |
| 13. | புத்தளம் | 2 | 563,520 | 4000 | 3614 | 90 |
| 14. | பதுளை | 2 | 526,200 | 4000 | 2904 | 73 |
| 15. | மொனறாகலை | 3 | 847,920 | 3000 | 243 | 08 |
| 16. | அனுராதபுரம் | 3 | 779,919 | 5000 | 2870 | 57 |
| 17. | பொலன்னறுவை | 1 | 250,200 | 3000 | 37 | 01 |
| 18. | அம்பாறை | 1 | 250,200 | 2000 | 178 | 09 |
| 19 | திருகோணமலை } | 1 | | 1500 | 50 | 03 |
| 20. | மட்டக்களப்பு } | 1 | 671,240 | 2000 | 29 | 01 |
| 21. | வவுனியா | 1 | 212,967 | 2000 | - | - |
| 22 | யாழ்ப்பாணம் | 3 | 618,461 | 5000 | 1094 | 22 |
| | நேரடியாகச் சேர்த்துக் கொள்ளல் | - | - | 5000 | 1039 | 21 |

கடந்த ஆண்டின் போது சேர்த்துக்கொள்ளப்பட்ட பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 62,759 ஆனதுடன், மீளாய்வாண்டின் போது இது 40,760 ஆகக் காணப்பட்டது. பங்களிப்பாளர்களைச் சேர்த்துக்கொள்ளும் அளவினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21,999 ஆல் குறைவு காணப்பட்டது.

(ஆ) நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுதல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கொழும்பு மாவட்டத்தின் 45 நடமாடும் சேவைகள் நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 04 நடமாடும் சேவைகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. ஏனைய மாவட்டங்களில் ஆகக் குறைந்தது ஒரு பிரதான நடமாடும் சேவையையேனும் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த

போதிலும், பொலொன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் போன்ற மாவட்டங்களில் எவ்வித நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மாவட்டச் செயலாளர்களின் தலைமையில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்படுவது, ஓய்வூதிய திட்டங்கள் தொடர்பாக தேசிய மற்றும் பிராந்திய மட்டத்திலான உத்தியோகத்தர்கள் மற்றும் மக்களை விளிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், சுயதொழில் பயிற்சி செயலமர்வுகள் ஆகியவற்றை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், திட்டமிடப்பட்டவாறு அந் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு முடியாதிருந்தது.

### 2.2.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தொடர் இலக்கத்துடனான பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் வழங்கட்டு நிர்வகிப்பது தொடர்பான கட்டுப்பாடு திருப்திகரமான நிலையில் இல்லாதிருந்ததுடன் காசுப் பெறுவனவு மற்றும் கணக்குப் பதிவுகளைச் சீராக்குவதற்கு அவசியமான கட்டுப்பாட்டு முறைகள் முறையாகச் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

எடுத்துக்காட்டாக பொது மக்களிடமிருந்து/ நிறுவகங்களிடமிருந்து பணத்தைச் சேகரிக்கையில் வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்களின் பிரதிகள் சபைக்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) வங்கியின் மூலமும் கிராம உத்தியோகத்தர்களின் மூலமும் பங்களிப்புத் தொகை சேகரிக்கப்படுகையிலும், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளில் நிலவும் நலிவுகள் காரணமாக பங்களிப்புத்தொகை, காசேட்டிற்கும் பங்களிப்பாளர்களின் கணக்குகளிற்கும் பதியப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருத்தல், வங்கிக்குக் கிடைக்கும் பங்களிப்புத் தொகை தொடர்பாக போதிய தகவல்கள் இன்மையால் அங்கத்தவர்களின் கணக்குகளில் பதியப்பட்டிராமை, அப் பணம் நீண்ட காலமாக இனங்காணப்படாத பெறுவனவாக பேணப்படல் போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

தவணைப்பண அறவீடு மற்றும் கணக்கீடுசெய்தலின் போது காணப்பட்ட மேற்குறித்த நலிவுகள் காரணமாக பின்வரும் சிக்கல்கள் நிலைமை அவதானிக்கப்பட்டது.

(i) ஒவ்வொரு அங்கத்தவரின் கணக்கிலும் காணப்படும் மீதியின் சரியான நிலை தொடர்பாக திருப்தியடைய முடியாதிருந்தமை.

(ii) அங்கத்தவர் பங்களிப்புத் தொகையைச் செலுத்தியிருந்த போதிலும் அப் பணம் நாளதுவரையாக்கப்படாமையால் அவர்களுக்கு நிறுவகம் தொடர்பாக ஏற்பட்ட நம்பிக்கையீனம் காரணமாக பங்களிப்புத் தொகைக்கான கொடுப்பனவை கைவிடல் நேரிடக்கூடும். பங்களிப்பாளர்களைச் சேர்த்துக்கொள்வதனைப் போல தற்போதுள்ள அங்கத்தவர்களைத் தக்கவைப்பதற்கு விசேட கவனம் எடுக்கப்பட்டிருக்காமை.

(iii) அங்கத்தவர்கள் செய்யப்படாமலிருப்பதற்கு, அவர்களின் பங்களிப்புத் தொகை செலுத்துவதிலான குறைபாடுகள் மாத்திரமன்றி நிறுவகத் தகவல்கள் சரியாக கணக்கிடப்படாமையும் காரணமாகியிருந்தது.

(iv) இவ்வாறே 2006 செப்தெம்பர் 25 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் 10(1), 10(2), 11 மற்றும் 13 ஆம் பிரிவுகளின் கீழ் உள்ள நிபந்தனைகள் எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றது என்பது குறித்துமாகும்.

### 2.2.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஆகக் குறைந்தது ஆண்டிற்கு 04 தடவைகளேனும் நடாத்தப்பட வேண்டிய போதிலும் சபையினால் ஒரு முறை மாத்திரமே கூட்டம் நடைபெற்றிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக சபைத் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சமூக பாதுகாப்பு நலன் முறைமைக்கு பங்களிப்பாளர்களைச் சேர்ப்பதும் பதிவேடுகளுக்கு கொண்டுவருதலும்.

(ஆ) இருப்புப் பதிவேடு

(இ) முற்பணங்கள்